இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

ஞாயிற்றுக்கிழமை 09-11-2025

# அறிவுத் திருவிழா!

மாண்புமிகு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி அவர்களின் முன்னெடுப்பால் தலைநகர் சென்னையில், வள்ளுவர் கோட்டத்தில் 'அறிவுத் திருவிழா' நடைபெற இருக்கிறது. அதனைக் கொள்கைத் திருவிழாவாக ஏற்பாடு செய்துள்ளார் துணை முதலமைச்சர்.

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார், பாவேந்தர் பாரதிதாசன், பேரறிஞர் அண்ணா, தமிழினத் தலைவர் கலைஞர், இனமானப் பேராசிரியர் ஆகியோர் வழித்தடத்தில் இயக்கத்தையும், இயக்கத்துக்குக் கிடைத்த ஆட்சிப் பொறுப்பையும் வைத்து நல்லாட்சி நடத்தி வருகிறார் திராவிட நாயகன் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். தலைவர் கலைஞர் அவர்கள் இருந்து நடத்தினால் எத்தகைய அளவுக்கு கழகத்தை நடத்துவாரோ அதைப் போலவே நடத்தி வருகிறார் தலைவர்.

'நான், எனது' என்று கருதாமல் 'நமது' என்று அனைவரையும் உள்ளடக்கிய 'திராவிட மாடல்' ஆட்சியை நடத்தி வருகிறார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சிமிக்க தமிழ்நாடாக உயர்த்திக் காட்டி வருகிறார். அதே வழியில் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் துணை முதலமைச்சராகப் பொறுப்பேற்று, சிறப்புத் திட்டங்கள் மூலமாக சிறப்பான தமிழ்நாட்டை உருவாக்கி வருகிறார்.

**'திரும்பத் திரும்ப கொள்கையைப் பேசுங்கள்' என்று தலைவர் கலைஞர் கட்டளையிட்டதை நிறைவேற்றி வருகிறார் இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி. புதிய புதிய இளைஞர்களை கழகத்தில் சேர்த்து, அவர்களுக்கு கொள்கை உரம் ஊட்டி வருகிறார். கழகத்துக்கு எதிராக அவதூறுகள் முன்வைக்கப்பட்டபோது அதை முறியடிக்கும் விதத்தில் 'பொய்ப் பெட்டி' என்னும் நிகழ்ச்சிகளை நடத்தினார். நீட் எதிர்ப்பு கையெழுத்து இயக்கம், டெல்லியை எட்டக் காரணமாக அமைந்தார். பாசறைக்கூட்டங்கள், 'முரசொலி' பாசறை பக்கம், முத்தமிழறிஞர் பதிப்பகம், 'என் உயிரினும் மேலான' என்கிற பேச்சுப்போட்டி, கலைஞர் மாணவப் பத்திரிகையாளர் திட்டம், கலைஞர் நிதிநல்கைத் திட்டம் என்று கொள்கையை விதைத்தபடியே இருக்கிறார் மாண்புமிகு உதயநிதி.**

அந்த வரிசையில்தான் 'அறிவுத் திருவிழா'வை ஏற்பாடு செய்துள்ளார். இதில், 'காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு' என்ற நூல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ( இன்று, நவம்பர் 8) வெளியிடப்பட உள்ளது. அரசியல், சமூகம், பண்பாடு, பொருளாதாரம் ஆகிய நான்கு முக்கிய முனைகளில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆற்றிய, ஆற்றிவரும் பங்களிப்பை மொத்தமாகத் தொகுத்துச் சொல்வதாக இந்நூலை உருவாக்கி இருக்கிறார் துணை முதலமைச்சர் அவர்கள். தமிழ்நாட்டின் வளர்ச்சியில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பங்களிப்பு பெருமளவில் அமைந்துள்ளதைத் தொகுத்துச் சொல்லி மலைப்பை ஏற்படுத்துகிறது இந்தத் தொகுப்பு.

1120 பக்கங்கள் கொண்ட இந்நூலில் கழகத் தலைவரின் செறிவான பேட்டியும், முன்னணியினரின் கடந்த கால நினைவுகளும் அருமையாகப் பதிவாகி உள்ளன. அகில இந்தியத் தலைவர்கள், தங்களது பார்வையில் கழகத்தின் பணியை அளவிடுகிறார்கள். பல்வேறு துறைகளின் அறிஞர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள் தி.மு.க.வின் முன்னெடுப்புகளை, சாதனைகளை, விளைவுகளை அலசிச் சொல்கிறார்கள்.

'இருவண்ணக் கொடிக்கு வயது 75' என்ற தலைப்பில் கண்காட்சியும் கருத்தரங்கும் நடைபெற இருக்கின்றன. பல்வேறு தலைப்புகளில் அறிஞர் பெருமக்கள் உரையாற்ற இருக்கிறார்கள்.

'முற்போக்குப் புத்தகக் கண்காட்சி' நவம்பர் 8 முதல் 16 வரை நடைபெறுகிறது. அரசியல் புத்தகங்களை வெளியிடும் 50 பதிப்பகங்கள் இந்தக் கண்காட்சியில் பங்கெடுக்கின்றன. அனைத்து நூல்களுக்கும் பத்து விழுக்காடு விலைத் தள்ளுபடி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

திராவிட இயக்கம் கலை, இலக்கிய இயக்கம் என்பதால் மாலை நேரம் முழுக்கவே கலை நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்துள்ளார் துணை முதலமைச்சர். புத்தர் கலைக்குழு, கோவன் கலைக்குழு, புதுகை பூபாளம் கலைக்குழு, நிகர் கலைக்கூடம் ஆகியவை கலை நிகழ்ச்சிகளை நடத்துகின்றன. 'மந்திரமா? தந்திரமா?' என்ற பகுத்தறிவு மேஜிக் நிகழ்ச்சியும் நடக்க இருக்கிறது.

**அரசியல், கலை, இலக்கியம், பண்பாடு ஆகியவற்றின் மேன்மைக்காகத் தொடங்கப்பட்ட இயக்கத்தை அதே வேகத்தோடு, அதே விவேகத்தோடு, அதே உணர்ச்சியோடு, அதே அக்கறையோடு கொண்டு செலுத்த வேண்டும் என்ற உன்னதமான நோக்கத்தோடு துணை முதலமைச்சர் மாண்புமிகு உதயநிதி அவர்களால் முன்னெடுக்கப்பட்ட இந்த 'அறிவுத் திருவிழா' திராவிட இயக்க வரலாற்றில் முக்கியமான நிகழ்வாக அமைய இருக்கிறது.**

"போர்க்களங்கள் மாறலாம், போர் தொடர்கிறது" என்கிறார் இளைஞர் அணிச் செயலாளர். போரும், போர்க்களமும் எத்தகையது என்பதை உணர்த்தப் போகிறது இந்த அறிவுத் திருவிழா.

'நம்பிக்கைகளுக்கு அல்ல, அறிவுக்கு முக்கியத்துவம் கொடு' என்று சொல்லும் இயக்கம் இது. அதனால்தான் இந்த இயக்கம், அடிப்படைவாதிகளால் விமர்சிக்கப்படுகிறது. ஆத்திரம் கொள்கிறார்கள். அவதூறுகளை வீசுகிறார்கள். பொய்களைப் பரப்புகிறார்கள். புனைவுகளை வரலாறு ஆக்குகிறார்கள். இவை எல்லாம் செய்கிறார்களே தவிர, அதற்கான விளைவுகள் ஏதுமில்லை. பதர்களாகவே போய்விடுகிறார்கள்.

**மக்கள் வளர்ச்சிக்கானதாக கொள்கை அமையும்போது அந்தக் கொள்கையை மக்களே காப்பாற்றுவார்கள் என்பதன் அடையாளம்தான் திராவிட இயக்கத்தின் இருப்பும், வெற்றியும். மக்களின் வேரில் திராவிடப் பூ பூக்கிறது. மலர்கிறது. காய்க்கிறது. கனியாக பலனை அந்த மக்களுக்கே தருகிறது. இந்தப் பிணைப்பை அறுக்கவே பிளவுவாதிகள் துடிக்கிறார்கள். காலம், உதயநிதிகளை உருவாக்குவதால் பிளவுவாதிகளின் எண்ணங்கள் நிறைவேறுவது இல்லை. நிறைவேறப் போவதும் இல்லை.**

அறிவுத் திருவிழாவில் பங்கேற்க வாருங்கள்! கொள்கைதான் இயக்கத்தின் வலிமை என்ற வகையில் நடைபெறும் அறிவுத் திருவிழா, உணர்ச்சித் திருவிழாவாக அமையட்டும்!



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.11.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், "உடன்பிறப்பே வா" என்ற தலைப்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக கழக நிருவாகிகளை சந்திக்கும் நிகழ்வில், இராஜபாளையம் மற்றும் திருவாடானை சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட கழக நிருவாகிகளை தனித்தனியாக சந்தித்து பேசினார். அப்போது கழக நிருவாகிகளுக்கு புத்தகங்களையும் வழங்கினார்.

## டெல்லியில் இந்திய ஹாக்கி கூட்டமைப்பின் நூற்றாண்டு விழா!

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்றார்!

### சிறப்பு புத்தகத்தை வெளியிட்டு நினைவுப் பரிசுகளை வழங்கினார்!

புதுடெல்லி, நவ. 9 -

டெல்லியில் இந்திய ஹாக்கி கூட்டமைப்பின் நூற்றாண்டு விழா துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்றார்.

"100 ஆண்டுகள் ஹாக்கி" சிறப்பு புத்தகத்தை வெளியிட்டார் துணை முதலமைச்சர் வீரர், வீராங்கனைகளுக்கு நினைவுப்பரிசுகளை வழங்கிய ஹாக்கி விளையாட்டில் தமிழ்நாட்டின் பங்களிப்பை பாராட்டி சான்றிதழ் வழங்கினார்.

டெல்லியில் நடைபெற்ற இந்திய ஹாக்கி கூட்டமைப்பின் நூற்றாண்டு விழாவில் கலந்துகொண்ட துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், 100 ஆண்டுகள் ஹாக்கி சிறப்பு புத்தகத்தை வெளியிட்டு, வீரர், வீராங்கனை களுக்கு நினைவுப் பரிசுகளை வழங்கினார்.

இந்திய ஹாக்கி கூட்டமைப்பின் நூற்றாண்டு விழா டெல்லியில் நடைபெற்றது. மேஜர் தயான்சந்த் தேசிய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற விழாவை ஒன்றிய விளையாட்டுத்துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா தொடங்கி வைத்தார். இவ்விழா வில் தமிழ்நாடு அரசு சார்பில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்றார். நிகழ்ச்சியில், முன்னாள் ஹாக்கி ஒலிம்பிக் போட்டியாளர்கள் மற்றும் ஹாக்கி வீரர், வீராங்கனைகளுக்கு நினைவுப்பரிசுகள் வழங்கி துணை முதலமைச்சர் உதயநிதி பாராட்டினார். தொடர்ந்து, 100 ஆண்டுகள் ஹாக்கி சிறப்பு புத்தகத்தையும் வெளியிட்டார். மேலும், கடந்த 100 ஆண்டுகளில் ஹாக்கி விளையாட்டில் தமிழ்நாடு சிறந்த பங்காற்றியதற்காக சிறப்பு சான்றிதழும் துணை முதலமைச்சர் உதயநிதியிடம் வழங்கப்பட்டது. ஆடவர் ஜூனியர் ஹாக்கிப் போட்டிக்கான உலகக்கோப்பை பயணமும் தொடங்கி வைக்கப்பட்டது.

விழாவில் உரையாற்றிய துணை முதலமைச்சர் உதயநிதி, தமிழ்நாட்டில் ஹாக்கி விளையாட்டு மிகுந்த பாரம்பரியம் கொண்டது என்றார். ஒலிம்பிக் விளையாட்டிற்காகவும், இந்திய அணிக்காகவும் எண்ணற்ற ஹாக்கி வீரர், வீராங்கனைகளை தமிழ்நாடு வழங்கி இருப்பதையும் சுட்டிக்காட்டி னார்.

**தமிழ்நாட்டில் ஜூனியர் உலகக் கோப்பை ஹாக்கி போட்டி ரூ.70 கோடி ஒதுக்கீடு**

ஹாக்கி விளையாட்டில் தமிழ்நாட்டிற்கென்று தனிச்சிறப்பான பாரம்பரியம் உள்ளது தமிழ்நாடு ஏராளமான ஹாக்கி வீரர்களை உருவாக்கி கொடுத்துள்ளது

ஒலிம்பிக், உலகக்கோப்பை போட்டிகளில் தமிழ்நாட்டு வீரர்கள் அதிகளவில் பங்காற்றி உள்ளனர் மதிப்புமிக்க பல்வேறு ஹாக்கிதொடர்களை தமிழ்நாடுநடத்தி இருக்கிறது ஆடவர் ஜூனியர் உலகக் கோப்பை2025 ஹாக்கி போட்டியை தமிழ்நாடு நடத்த உள்ளது

**முதல்முறையாக 24 நாடுகள் பங்கேற்கின்றன**

சென்னை, மதுரையில் ஹாக்கி போட்டிகள் நடைபெற உள்ளன இந்த தொடருக்காக முதலமைச்சர் மு.க .ஸ்டாலின் ரூ.70 கோடியை ஒதுக்கீடு செய்துள்ளார் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஹாக்கி விளையாட்டு பிரபலமாகியுள்ளது

விளையாட்டில் தமிழ்நாடு சிறந்து விளங்க முதலமைச்சரின் தொலைநோக்கு திட்டமே காரணம் தமிழ்நாட்டில் 11,000 ஹாக்கி வீரர், வீராங்கனை கள் இருப்பது பெருமையாக இருக்கிறது

அவர்கள் அனைவரும் கல்லூரி, பல்லைக்கழக, முதலமைச்சர் கோப்பைக்கான போட்டிகளில் விளையாடுகிறார்கள் எனக் குறிப்பிட்டார்.

# பஹ்ரைனில் - அயலக தமிழ் இந்தியர் சங்கம் (NRTIA) சார்பில் 'முப்பெரும் விழா!'

### அயலக அணிச் செயலாளர் எம்.எம்.அப்துல்லா எம்.பி. - பரிதி இளம் சுருதி பங்கேற்பு!

பஹ்ரைன், நவ. 9-

பஹ்ரைன், அயலக தமிழ் இந்தியர் சங்கம் (NRTIA) சார்பில், நமது கழகத்தின் திருவிழாவான முப்பெரும் விழா 31.10.2025 அன்று பஹ்ரைன் மனாமா நகரில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

விழாவை துணை அமைப்பாளர் கபீர் அகமது ஒருங்கிணைக்க, பொது செயலாளர் இஸ்மாயில் வரவேற்புரையுடன், துணை அமைப்பாளர்கள் கருணாநிதி சண்முகம், வேம்புராஜ், சுல்தான் இப்ராஹிம், திருமேனி, சதீஷ் குமார், மன்னை முபாரக், லலித் குமார், அவை தலைவர் முபாரக், ஆலோசனை குழு தலைவர் பாபு, துணை தலைவர் மணிவண்ணன் சந்திரன், துணை செயலர்கள் பிரபா, ஆபீத் அலி, பொருளாளர் அசோக், துணை பொருளாளர் பவுல் டேவிட் மூத்த உறுப்பினர் நாஞ்சில் பசீர் ஆகியோர் முன்னிலை வகிக்க விழா சிறப்பாக தொடங்கியது.

அமைப்பாளர் முஹமது ஹுசைன் மாலிம் தலைமை உரையாற்றி, NRTIA பஹ்ரைன் செயல்பாடுகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

நிகழ்வில் சிறப்பு அழைப்பாளர்களாக தாயகத்திலிருந்து அயலக அணி செயலாளர், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் M.M.அப்துல்லா மற்றும் அயலக அணி துணை செயலாளர், பெருநகர சென்னை 99வது வார்டு உறுப்பினர் பரிதி இளம் சுருதி கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினர்.

அவர்களின் உரைகளில், எனது வாக்குசாவடி - வெற்றி வாக்குசாவடி, மாநில முன்னேற்றம் உள்ளிட்ட முக்கியமான தலைப்புகள் குறித்து பேசினர். மேலும், பஹ்ரைன் அயலக அணியின் சிறப்பான செயல்பாடுகளை பாராட்டினர்.

அணி செயலாளர் எம்.எம்.அப்துல்லா கழக முன்னோடிகளான எஸ்.டி.பால்ராஜ் அவர்களுக்கு தந்தை பெரியார் விருதும், அப்துல் கபூர் அவர்களுக்கு அறிஞர் அண்ணா விருதும், மொய்தீன் அவர்களுக்கு கலைஞர் கருணாநிதி விருதும், செயல் வீரர்களுக்கான தளபதி மு.க.ஸ்டாலின் விருது பவுல் டேவிட் அவர்களுக்கும் வழங்கி கௌரவித்தார்.

அதனைத் தொடர்ந்து பஹ்ரைன் NRTIA நிர்வாகிகள தங்களது உரைகளில் கழகத்தின் வளர்ச்சி, நோக்கம், மற்றும் பஹ்ரைனில் தங்களது சமூகச் சேவைகள் குறித்து எடுத்துரைத்தனர்.

இந்த விழாவில் சவூதி கிழக்கு மண்டல NRTIA அமைப்பாளர் சிக்கந்தர் பாபு, மத்திய மண்டல அமைப்பாளர் சந்தோஷ் வின்பிரட் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினர். கிழக்கு மண்டல துணை அமைப்பாளர்கள் திருச்சி பிலால், முகம்மது ஜியாவுல் ஹக், சவுதி சமுதாய செயல்ப்பாட்டாளர் வெங்கடேஷ் ஆகியோர் பங்குப் பெற்று சிறப்பித்தனர்.

விழாவில் இந்தியன் பள்ளி நிர்வாகிகள், பாரதி தமிழ் சங்க நிர்வாகிகள், மற்றும் பல்வேறு அமைப்புகளின் நிர்வாகிகள் சவுதி செயல்பாட்டாளர்கள் கலந்துகொண்டு விழாவை சிறப்பித்தனர்.

## தற்காலிக தூய்மைப் பணியாளர்களை

# நலவாரிய உறுப்பினராகச் சேர்ப்பது தொடர்பான விழிப்புணர்வு முகாம்!

### தலைவர் - திப்பம்பட்டி ஆறுச்சாமி, துணை தலைவர் கனிமொழி பங்கேற்பு!

கோவை, நவ.9-

தற்காலிக தூய்மைப் பணியாளர்களை நலவாரிய உறுப்பினராக சேர்ப்பது தொடர்பான விழிப்புணர்வு முகாம் தமிழ்நாடு தூய்மைப்பணியாளர் நலவாரிய தலைவர் திப்பம்பட்டி ஆறுச்சாமி தலைமையில், துணைத்தலைவர் கனிமொழி முன்னிலையில் நடைபெற்றது.

கோவை டவுன்ஹாலில் உள்ள 82 வது வார்டு அலுவலகத்தில் தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்களின் நலன் தொடர்பான கள ஆய்வுக்கூட்டம், தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரிய தலைவர் திப்பம்பட்டி ஆறுச்சாமி தலைமையில் துணைத் தலைவர் கனிமொழி முன்னிலையில் நடைபெற்றது.

இதில், தமிழ்நாடு தூய்மை பணியாளர் நலவாரியத்தின் கீழ் தற்காலிக தூய்மை பணியாளர்களுக்கு வழங்கப்படுகின்ற நலத்திட்டங்கள் மற்றும் தூய்மைப் பணியாளர்கள் வாரிசு தாரர்களுக்கு, கல்வி உதவித்தொகை, கல்வி கடன் வழங்குவது குறித்தும், தற்காலிக பணியாளர்கள் நலவாரியத்தில் உறுப்பினராக சேர வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டது. மேலும், தற்காலிக பணியாளர்களுக்கு வேட்டி, சேலை மற்றும் இனிப்புகள் வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில், தூய்மைப்பணியாளர் நலவாரிய உறுப்பினர் தென்னை சிவா, தாட்கோ மேலாளர் ரஞ்சித்குமார், சுகாதார ஆய்வாளர் தனபால் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



நவம்பர் 1 அன்று ஆஸ்திரேலியாவில், பெரியார் பன்னாட்டு மையம் மற்றும் பெரியார் – அம்பேத்கர் சிந்தனை வட்டம் (PATCA) இணைந்து நடத்திய 4ஆம் பன்னாட்டு மனிதநேயர் மாநாட்டின் தொடக்க விழாவில் கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி., தந்தை பெரியார் மற்றும் டாக்டர் அம்பேத்கர் அவர்களின் படங்களுக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் பேராசிரியர் சுப. வீரபாண்டியன் மற்றும் பலர் உள்ளனர்.